

# திராவிட மாடல் அரசு

95

**பன்னீர் பெருமாள்**

# அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்!

## சமூக மாற்றத்தின் ஏணிப்படி

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

திராவிட இயக்கத்தின் தாய் இயக்கமான, **‘நீதிக்கட்சி’**, அனைத்து மக்களுக்கும் அரசியல், கல்வி, பொருளாதார வாய்ப்புகள் மற்றும் அடித்தட்டு மக்களின் சமூக நிலை உயர்த்தப்பட வேண்டும் என, இலக்கு வைத்து வேலை செய்தது. அன்று, திராவிட இயக்க முன்னோடிகள் கண்ட கனவுகள் எல்லாம், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் அமைந்த ஆட்சிகளின்போது திட்டங்களாகச் செயல் வடிவம் கண்டன.

அந்தக் கனவுகளை, இலக்குகளை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்கிறது இன்றைய முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி. ஆம்; தொழில்துறை ஊக்குவிப்புகளில் திராவிட மாடல் ஆட்சியின் செயல் திட்டங்கள் எல்லாம் இன்று இந்தியாவுக்கே முன்னோடியாகத் திகழ்கின்றன.

குறிப்பாக, தொழில் வளர்ச்சி என்பது பரந்துபட்டதாக மட்டுமில்லாமல், நிலையான நீடித்த வளர்ச்சியாகவும் இருக்க வேண்டும். அதேநேரத்தில், திராவிட மாடல் அரசு, அதனைச் சமூகநீதி வளர்ச்சியாகவும் திட்டமிட்டது. அதன் விளைவுதான் அண்ணல் அம்பேத்கர் தொழில் சாம்பியன் திட்டம் (ஏ.ஏ.பி.சி.எஸ்.).

### புதிய தொழில் ஊக்குவிப்புகள்

2021-ஆம் ஆண்டு திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், ‘தமிழ்நாட்டில் 46 புதிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. அவற்றில், சுமார் 1.39 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தி, அளிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, ‘தொழிற்துறை உற்பத்தி வளர்ச்சியில் இந்திய அளவில் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது’ என ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களே சொல்கின்றன.

தமிழ்நாடு அரசு சிறு, குறு தொழில் நிறுவனங்களை உருவாக்குவது, வேலை வாய்ப்பைப் பெருக்குவது மட்டும் இலக்காக வைத்திருக்கவில்லை. புத்தாக்கத் தொழில்களில் (ஸ்டார்ட்-அப்) இளைஞர்களை ஈடுபடுத்தி, தொழில்முனை வோர்களை உருவாக்கவும், இலக்கு வைத்து ஸ்டார்ட்-அப் தமிழ்நாடு திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தினை விரிவாக்கம் செய்யும் வகையில், சமூகநீதி நோக்கத்தில் உருவாக்கப்பட்ட திட்டம்தான் அண்ணல் அம்பேத்கர் தொழில் சாம்பியன் திட்டம் (ஏ.ஏ.பி.சி.எஸ்.).



திராவிட மாடல் அரசின் சமூகநீதிக் கண்ணோட்டத்துடன் உருவான ‘அண்ணல் அம்பேத்கர் தொழில் சாம்பியன் திட்டம்’ இந்தியாவுக்கே முன்னோடி என இந்தத் திட்டத்தினைப் பாராட்டி, ‘தினத்தந்தி நாளிதழ்’ சில நாட்களுக்கு முன் தலையங்கம் எழுதியது. அதை நமது முதலமைச்சர் அவர்களும் சமூக வலைத்தளங் களில் பகிர்ந்திருந்திருந்தார்.

தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்புகள் என்று செயல்படும் நம் அரசு, பட்டியல் மற்றும் பழங்குடி மக்களில் இருந்து அதிக தொழில்முனைவோரை உருவாக்க வகுத்த திட்டம் இது. தமிழ்நாடு சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் துறை (MSME DEPARTMENT) மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### கடனும் மானியமும்

2023-ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பட்ஜெட் கூட்டத் தொடரின்போது, ஏ.ஏ.பி.சி.எஸ். திட்டத்தினை அறிவித்தார், தமிழ்நாடு முதலமைச்சர். பட்டியல் சமுதாயம் மற்றும் பழங்குடிச் சமுதாயங்களைச் சேர்ந்த ஆர்வமுள்ள தொழில்முனைவோருக்கு இந்தத் திட்டத்தின் மூலம் கடன் வழங்கப்படும்.

புதிய தொழில்முனைவோர் ஈடுபடும் உற்பத்தி, வணிகம், மற்றும் சேவை சார்ந்த எந்தவித புதிய தொழில் தொடங்கவும், இந்தத் திட்டத்தின் மூலம் கடன் பெறலாம் என அறிவிக்கப்பட்டது. குறிப்பாக, புதிய தொழில் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் 35 சதவிகிதம் வரை முதலீட்டு மானியம் (Capital Subsidy) வழங்கப்படும். அதிகபட்சத் தொகையாக ஒன்றரை கோடி ரூபாய் வரை கடன் பெறலாம், என்றும் திட்டத்தில் வரையறுக்கப்பட்டது.

தொழிலின் மொத்தத் திட்டத்தில் 65 சதவிகிதம் வங்கிக் கடனாக ஏற்பாடு செய்யப்படும். மீதமுள்ள 35 சதவிகிதம் அரசின் பங்காக முன் மானியமாக வழங்கப்படும். இவை போக, தொழில் தொடங்க வங்கியில் வாங்கும் கடனுக்கான வட்டி விகிதத்தில் 6 சதவிகித வட்டியை அரசே வங்கியில் செலுத்திவிடும்.

அண்ணல் அம்பேத்கர் தொழில் சாம்பியன் திட்டத்தின் வழியாக இதுவரையில், 1,988 தொழில்முனைவோரை நம் அரசு உருவாக்கியிருக்கிறது. புதிய தொழில்முனைவோர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன் ரூ.453 கோடி ரூபாய். அரசு மானியமாக 230 கோடி ரூபாய் அளிக்கப்பட்டுள்ளன.

### யாரெல்லாம் பயன் பெறலாம்

பட்டியல் மற்றும் பழங்குடிச் சமூகத்தைச் சேர்த்த 18 முதல் 55 வயதுக்குட்பட்ட தொழில்முனைவோர் பயன் பெறலாம். தனிநபர்கள் மட்டுமல்லாது, தனிநிறுவனமாக, கூட்டுநிறுவனத்தின் பங்குதாரராகவும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற முடியும். இந்தத் திட்டத்தில் பயன்பெறுவதற்குக் குறைந்தபட்ச கல்வித்தகுதி நிர்ணயம் செய்யப்படவில்லை.

தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ள பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் நேரடியாகக் கழிவு நீர் அகற்றும் பணி செய்வதைத் தவிர்க்கும் பொருட்டும், அவர்களைத் தொழில்முனைவோராக மாற்றும் நோக்கிலும், 213 தூய்மைப் பணியாளர்களுக்கு நவீன கழிவுநீர்அகற்றும் ஊர்தி வாங்க, இந்தத் திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

புதிய தொழில்கள் தொடங்குவது, தொழிற்சாலைகள் உருவாக்குவது, ஏற்கெனவே இருக்கும் தொழில் நிறுவனங்களை விரிவாக்கம் செய்வது ஆகியவற்றுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் கடனும் மானியமும் பெறமுடியும்.

சமூகத்தில் இவர்கள்தான் தொழில் அதிபர்களாக, முதலாளியாக இருக்க முடியும்;

**ஏற்றத்தாழ்வுகளை உடைத்து ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற முழக்கத்துடன் தொழில்துறையில் சாதித் தடைகளையும் உடைத்து வருகிறது நம் அரசு.**

மற்றவர்கள் அவர்களைச் சார்ந்துதான் வாழ வேண்டும் என்கிற ஏற்றத்தாழ்வுகளை உடைத்து ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற முழக்கத்துடன் தொழில்துறையில் சாதித் தடைகளையும் உடைத்து வருகிறது நம் அரசு.

முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய நிலச் சீர்திருத்தச் சட்டங்களும், பொது விநியோகக் கட்டமைப்பும் குத்தகைதாரர் உரிமைச் சட்டமும் சமூகத்தில் ஏற்றத்தாழ்வைக் குறைத்தன என்பது சமூகப் பொருளாதார ஆய்வாளர்களின் கருத்து. அதன் தொடர்ச்சியாகவே, திராவிட மாடல் நாயகரால் உருவாக்கப்பட்ட ‘அண்ணல் அம்பேத்கர் தொழில் சாம்பியன் திட்டம்’ எல்லோருக்கும் வாய்ப்புகளையும் கொடுத்து, சமூக மாற்றத்தில் பட்டியல் சமூகத் தொழில்முனைவோர்களின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**...சாதனை தொடரும்**

## வரலாற்றை மாற்றிய ஆணையங்கள்!




சுதந்திர இந்தியாவில், பல்வேறு கால கட்டங்களில், ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் அமைத்த ஆணையங்கள் ஏராளம். ஆணையங்கள் மூலம் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களும் சமூக மாற்றங்களும் ஏராளம்.

தமிழ்நாட்டில் கலைஞர் ஆட்சியில் இருந்தபோது, அவர் அமைத்த ஓய்வுபெற்ற நீதிபதி ராஜமன்னார் தலைமையிலான ஆணையம், மாநிலச் சட்ட மன்றங்களுக்கான அதிகாரத்தினைத் தீர்க்கமாக வலியுறுத்தியதை அறிவோம். அதுபோல, மண்டல் ஆணையம் வழங்கிய பரிந்துரைகளால், இந்திய அளவில் கல்வி வேலைவாய்ப்புகளில் நிகழ்ந்த மாற்றங்கள் வரலாற்றுச் சுவடுகள்.

இப்படியான ஆணையங்கள் மற்றும் ஆணையங்களின் பின்புலம் குறித்து சுருக்கமாக அறிமுகப்படுத்துகிறது. ‘ஆணையங்களும் வரலாறும்’ என்கிற இந்த நூல். சென்னை மாகாணத்தில் அமைக்கப்பட்ட ‘கோமான் ஆணையம்’, ‘உஸ்மான் ஆணையம்’, ‘ஹார்டாக் ஆணையம்’ ஆகியவை கல்வி, மருத்துவத்தில் செய்த சீர்திருத்தங்களை இந்நூல் புரிந்து கொள்ள உதவுகிறது. ரூ.80 விலையில் ‘வெங்காயம் பதிப்பகம்’ வெளியிட்டுள்ள இந்த நூலின் ஆசிரியர் சொக்கலிங்கம். ‘ஆரியர் பண்பாட்டுப் படையெடுப்பு’, ‘தந்தை பெரியார் ஓர் அறிமுகம்’ என எளியநடையில் எழுதிய நூல்கள் ஏற்கெனவே கவனம் பெற்றவை. இந்த நூலினைப் பெற 96002-94284 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## ::ப்ளாஷ்பேக்



### 51 ஆண்டுக்கு முந்தைய சந்திப்பு!



முத்து.துரை

1973-ஆம் ஆண்டில், சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நான் பணியாற்றினேன். அந்த ஆண்டு, தலைவர் பிறந்தநாள் விழாவின்போது, என்னுடன் பணியாற்றிய நண்பர்களுடன் சென்று தலைவருக்கு வாழ்த்துத் தெரிவித்தோம். அப்போது, தலைவரின் இல்லத்தில் இன்றைய முதலமைச்சர் அவர்களுடன் குழுவாகப் புகைப்படம் எடுத்துக் கொண்டோம். 51 ஆண்டுகளுக்கு முன் எடுக்கபட்ட இந்தப் புகைப்படத்தைப் பார்க்கையில், இன்றைக்குப் பெருமிதமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

**– முத்து.துரை, கோட்டூர், சென்னை – 85**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### ‘சண்டே அப்சர்வர் வழக்கு!’

1942, 43, 44-ஆம் ஆண்டுகளில் நீதிக்கட்சியில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட நிகழ்ச்சி ‘சண்டே அப்சர்வர்’ பாலசுப்பிரமணியம் மீது ராஜாஜி தொடர்ந்த வழக்காகும். ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கம் பெரும் கலவரமாக மாறிய நிலையில், அது குறித்து, 1942-ஆம் ஆண்டு அக்டோபர் 4-ஆம் தேதி ‘சண்டே அப்சர்வர்’ இதழில், தலையங்கம் எழுதினார் பாலசுப்ரமணியம். அதற்காக, ராஜாஜி அவர்மீது மானநஷ்ட வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கின் மேல் முறையீட்டில் மாகாண நீதிமன்றம் விதித்த அபராதத்தை உயர்நீதிமன்றம் ரத்து செய்ததுடன், ‘சண்டே அப்சர்வர்’ பாலசுப்பிரமணியம் குற்றவாளி அல்ல என தீர்ப்பளித்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

663

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.